அளவுக்குத் தான் கட்டணம் விதித்துக்கொண்டிருந்தார்கள். வரி உயர்த்தப்பட்டதும் அவர்கள் ஓரளவு கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் நடத்தப்படும் எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணம், தனியாரால் நடத்தப் படும் எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணத்தை விட அதிகமாக இருக்கிறதே, அதன் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, எல்லா பஸ் முதலாளி களும் அரசாங்கம் அனுமதித்திருக்கும் உச்ச வரம்பு அளவுக்குக் கட்டணத்தை விதித்த பிறகும், ஒரு தனிப்பட்ட பஸ் முதலாளி தான் பழைய சார்ஜுக்கே ஓட்டுகிறேன் என்று சொல்லியும் கேட்காமல் அரசாங்கம் அவர் மீது நடவடிக்கை எடுத்திருப்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 'அரசாங்கம் ஒன்றும் உயர்த்தும்படி சொல்லவில்லை' என்று சொன்னார்கள். அரசாங்கம் உயர்த்தச் சொல்லி வற்புறுத்தியதாக ஒருவர் இப்போது கேஸ் போட்டிருக்கிறார். அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், ஒரு மைலுக்கு இவ்வளவு கட்டணம் வசூலிக்கவேண்டும் என்று சர்க்கார் நிர்ணயித்திருப்ப தில் இத்தனை காசிலிருந்து இத்தனை காசு வரை வாங்கலாம் என்று இருப்பதால் இவ்வளவு குழப்பங்கள் ஏற்படுகின்றன. அதற்கு பதிலாக ஒரு மைலுக்கு இத்தனை தான் வாங்கவேண்டுமென்று நிர்ணயித்தால் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

Wind mills for irrigational purposes

* 26 *Q.*—SRI V. SANKARAN,
SRI T. P. ALAGAMUTHU : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any of the experts has been requested to investigate and report on the installation of wind mills and utilisation of wind power for irrigational pumping; and

(*b*) if so, the details thereof?

2nd August 1966]

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : சார், இந்த காற்று மில்களை ஏற்படுத்தினால் நாகப்பட்டினத்திற்கு உதவியாக இருக்கும் என்று இந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினத்தில் பாசன வசதி செய்வதற்காவது அங்கே அதிகபட்ச யந்திரங்களை அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எல்லாவற்றையும் பார்த்து அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். பரீட்சார்த்தமாக தஞ்சாவூர் ஜில்லாவிலே திருவாரூரிலும், இராமநாதபுரம் ஜில்லாவிலே உச்சிப்புளியிலும் காற்றாடி யந்திரங்களை வைத்துப் பார்க்கலாம், பிறகு அதைப் பற்றி முடிவு செய்யலாம் என்று இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, சபை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இரண்டு-மூன்று அபிப்பிராயங்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு-மூன்று அபிப்பிராயங்களை சர்க்கார் பரிசீலித்ததா ? அவை எந்த எந்த இடங்களுக்குப் பொருந்தும் என்று சர்க்கார் ஏதாவது அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது அந்தத் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

Prevention of wind erosion

*27 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state the measures proposed to be taken to prevent wind erosion and also the action of high velocity winds depositing soil particles in cultivable lands situated near Western Ghats in Bodinayakanur, Madurai district?

கனம் திரு. பூ. கக்கன் : மதுரை மாவட்டத்தில், போடிநாயக்கனூர் பகுதியில், காற்று அரிப்பையும், பெருங்காற்று வீச்சினால் ஏற்படும் விளைவுகளையும் தடுப்பதற்காகவும், மண்மேடுகள் பயிர் நிலங்களுக்குப் பரவவொட்டாமல் தடுக்கிற ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 36 மைல் தூரத்திற்குக் காற்றுத் தடைகள் எழுப்பப்பட்டுள்ளன. ஆண்டு தோறும் மேலும் மரங்களை வைத்துப் பயிரிடுவதன் மூலம் இக் காற்றுத் தடைப்பகுதி விரிவாக்கப்பட்டு வருகிறது.

இந்த வட்டாரத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெரும் பரப்பைக் கருத்தில் கொண்டு, போடிநாயக்கனூர் பகுதியில் புழுதிப் புயல்களால் மண்மேடிட்டுப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பரிசீலனை செய்வதற்கும், காற்று வீச்சினால் மண் அரிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்குரிய விரிவான திட்டங்களையும் மதிப்பீடுகளையும் தயாரிப்பதற்கும் அண்மையில் ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது நிறைவேறி வருகிறது.

---

* 122-125-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.